இணைப்பு I

[111-ம் பக்கத்தில் 309-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

தொடர் எண்.	கோரிக்கை.	குறிப்புரை.
(1)	(2)	(3)
1.	தினக்கூலி பெறும் தொழிலாளர்களின் பணிகளை நிரந்தரப்படுத்துவது.	குறுகிய கால காலிப் பதவிகளின் முற்றிலும் தாற்காலிக அடிப்படையில் பாற்பண்ணைத் திட்டத்தில் வேலைக்கமர்த்தப்படும் நாட்கூலியாட்களை உறுப்பினர் குறிப்பிடுகிறார் போலும். அவர்களை நிரந்தரமாக்குவதற்கு நிலையான பதவிகள் ஏதுமில்லாததால் இந்த நாட்கூலியாட்களை நிரந்தரமாக்குவது இயலாததாகும்.
2.	மஸ்தூர்களுக்குப் பண்டிகை விடுமுறை நாட்கள் அறவே மறுக்கப்படுகின்றன. காலச் சம்பள ஏற்ற முறைப் பணியாளர்களுக்கு பண்டிகை விடுமுறை நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.	இது குறித்து, சம்பள ஆணைக் குழு பரிவுரை எதையும் செய்யவில்லை. பண்டிகை விடுமுறை நாட்களை மஸ்தார்களுக்கு வழங்குவது எல்லா அரசு நிறுவனங்களுக்கும் பொதுவானதாகும். இது பொதுவானதாக கொண்டு அரசால் ஆய்வு செய்யப்படுகிறது.
3.	பணியில் தகுதி பெற்ற, அனுபவமுள்ள பணியாளர்கள் இருந்த போதிலும் உதாரணமாக, அரசு பால் பண்ணையில் உள்ள (வலவர், கார் சுத்தம் செய்பவர்கள், இயக்குபவர்கள், மின்சார உதவியாட்கள், மேஸ்திரிகள்) ஆகியவர்களை நேரடி நியமனம் செய்தல்.	ஆணையாளரால் நேரடி நியமனம் செய்யப்பட்டது குறித்த விவரங்கள் பெறப்பட்டுள்ளன. இது குறித்து விதிக்கப்பட்ட விதிகளுக்கும் விதிமுறைகளுக்கும் இந்த நியமனங்கள் எவ்வாறு பொருந்தியுள்ளன என்பது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

1972 நவம்பர் 14]

தொடர் எண்.	கோரிக்கை.	குறிப்புரை.
(1)	(2)	(3)
4.	10 சதவீதத்திற்குமேல் வாடகை பிடித்துக் கொள்ளுதலும் கடந்த காலத்திலிருந்து அத்தகைய வாடகை பிடித்துக் கொள்ளுதலும்.	அலுவலக சில்லறைச் செலவு நிதியிலிருந்து சம்பளம் பெறும் பணியாளர்களிடமிருந்து அவர்கள் குடியிருந்து வரும் (அவர்கள் குடியிருப்பதற்கு உரிமையில்லாத குடியிருப்புகளில்) குடியிருப்புகளுக்கான வாடகையை மாதத்திற்கு ரூ. 5 என்ற ஒரே வீதத்தில் வசூலிக்கும் படியும் 1-1-1969-க்கு முன்புள்ள கால அளவிற்கான அத்தகைய வசூல்களை வேண்டாமென விட்டு விடும்படியும் 30-6-1971 நாளிட்ட உணவுத் துறையின் 378-ம் எண் அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
5.	மூன்றுண்டுக்கால பணி முடித்த பின்னரும் சிலருக்கு சம்பள உயர்வு அளிக்கப்படாமலிருத்தல்.	சட்ட விரோதமான வேலை நிறுத்தங்களில் பங்கு கொண்டதன் காரணமாக பணியில் தொடர்ச்சியற்ற நிலை எற்பட்டு சில பணியாளர்களில் பணிகள் முறைப்படுத்தப் படாமலுள்ளதைக் குறிப்பிடுகிருர் போலும்.
6.	விசாரணை ஏதும் செய்யாமல் அபராதம் சம்பள உயர்வுகளை நிறுத்தி வைத்தல் முதலியன போன்ற தண்டனையளித்தல். இது குறித்த மேல் முறையீடுகள் மீது முடிவெடுக்காமை.	விதிகளுக்கு முற்றிலும் இணங்க இந்தப் பணியார்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. விதிகளை மீறிய நேர்வு ஏதேனும் இருப்பின், தண்டனை அளிக்கப்பட்டதற்கு எதிராக மேல் முறையீடு

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்.	கோரிக்கை.	குறிப்புரை.
(1)	(2)	(3)
		செய்து கொள்ள பாதிக்கப்பட்ட பணியாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.
7.	மஸ்தூராகப் பதவி இறக்கம் செய்யப்பட்ட விசையேற்றம் இயக்குபவரான கிருஷ்ணன் பற்றிய வழக்கு இன்னும் முடிவு செய்யப்படவில்லை.	இது, ஆணையாளர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த காரணமாகக் கீழ் தரத்திற்கு இறக்கியது குறித்தாகும். அரசுக்கு இது குறித்து மேல்முறையீடு ஒன்று செய்யப்பட்டு, மறுக்கப்பட்டது.
8.	காவலர் தொடர்ந்த வழக்குகளின் காரணமாகப் பதவியிலிருந்து தாற்காலிகமாக நீக்கப்பட்ட 7 (ஏழு) பால் கறவையாளர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் மறுபடியும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆனால் முன்னர் கொடுக்கப்படாமல் இருந்த சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதைப் போலவே, சில சங்க நடவடிக்கைகளும் ஏனைய இதையொத்த நேர்வுகளும் உள்ளன.	ஏற்கெனவே வழங்கப்பட்ட வாழ்க்கைப்படி தவிர பதவியிலிருந்து தாற்காலிகமாக நீக்கப்பட்ட கால அளவில் அவர் சம்பளம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர். அவர்கள் முறையே 9-11-68, 10-11-68, 11-11-68 ஆகிய நாட்களிலிருந்து பணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு எதிராக துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பதவிலிருந்து தாற்காலிகமாக நீக்கப்பட்ட கால அளவு, அவர் எவ்வளவு விடுப்பு நாட்களுக்குத் தகுதியுடையவரோ அத்தனை நாட்களுக்கு விடுப்பாகக் கருதப்பட்டது. அவர்களுக்குப் பணிக்குரிய சம்பளம் வழங்குவதற்கு நியாயமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1972 நவம்பர் 14]

தொடர் எண்.	கோரிக்கை.	குறிப்புரை.
(1)		(3)
9.	மிக அற்பமான காரணங்களுக்காக இரண்டு காவலாட்கள் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டனர், இதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.	கடமைகளைச் செய்யத் தவறிய கடுமையான காரணங்களுக்காக அவர்கள் பதவியிலிருந்து தாற்காலிகமாக நீக்கப்பட்டனர். இந்த வழக்குகளில் அவர்களை மஸ்தூர்களாகப் பதவி இறக்கி இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
10.	பணிபுரியும் போது விபத்திற்குள்ளான பணியாளர்களுக்கு சம்பளத்துடன் விடுப்பு அல்லது இழப்பீட்டுத் தொகை அளிக்கப்படவில்லை.	பணி முறைப்படுத்தப்படாத பணியாளர்கள் விபத்துக்கள், அல்லது ஏனைய காரணங்களுக்காக பணிக்கு வராமலிருந்தால், அதற்காக, மருத்துவச் சான்றிதழ் அளிப்பதன் மேல் ஈட்டாத விடுப்புக்கு (unearned leave) தகுதியுடையவரல்லர்.

இணைப்பு II

[113-ம் பக்கத்தில் 312-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க)

அறங்காவலர் பணிபற்றிய விவர அறிக்கை

(1) 1959-ஆம் ஆண்டில் இந்து சமய—அறநிலையச் சட்டத்தின் கீழ் உள்ள பல அதிகாரிகள் விடுக்கும் சட்டபூர்வமான உத்தரவுகளுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும் என அறங்காவலர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

(2) அறங்காவலர், கோயிலின் காரியங்களை நிர்வகிக்க வேண்டியவராவார். பொறுப்பு நிலையம் எற்படுத்திய திட்டங்களின்படியும், நிலையத்தின் வழக்கத்தின்படியும், தக்க அதிகாரியால் அளிக்கப்பெறும் சட்ட பூர்வமான உத்தரவுகளின்படியும் அதன் நிதியினையும் சொத்துக்களையும் உபயோகித்தல் வேண்டும்.